# வெந்நீர் மேகங்கள்

மேலத்தெரு உலகநாதம்பிள்ளைக்கு உடம்பு சரியில்லை. இன்றோ நாளையோ என ஊரே அல்லோகலப்பட்டது. வாழ்வாங்கு வாழ்ந்த மனிதர். வயோதிகத்தில் கவனிப்பார் இல்லை. அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் பறந்து கொண்டிருக்கும் பிள்ளைகள் எப்போதாவது வந்து 'ஹலோ' சொல்லிவிட்டுப் போவதுடன் சரி.

பிரமாண்டமான இரண்டு கட்டு வீடு. சிறப்பாக வேய்ந்த ஓட்டு வில்லை வீடு, கூடந்தாழ்வாரங்களுடன். அவர் பிள்ளைகள்லாம் சின்னஞ் சிறுசுகளா இருந்தப்போ வீடே கலகலன்னு இருக்கும். எல்லா பந்துக்கள்டேயும் ரொம்ப அன்பா நடந்துப்பார், உலகநாதம் பிள்ளை. தகப்பனார் சொத்து சேர்த்து வைத்திருந்தாலும், தம்பி தங்கைகளைக் கரையேத்தினது எல்லாம் உலகநாதம் பிள்ளைதான்.

வாய்க்கால் வரப்புலேர்ந்து, ஊருக்குள்ள ஒவ்வொரு விஷயமும் அவருக்கு அத்துபடி. ஊர்ல எல்லா விஷயங்கள்லேயும் அவரோட ஆலோசனை இருக்கும். கோயில்ல முதல் மரியாதை அவரோட வீட்டுக்குத்தான். அறிந்தவன், தெரிந்தவன், வேண்டியவன், வேண்டாதவன்னு பார்க்க மாட்டார். யார்வந்து என்ன உதவி கேட்டாலும் உடனே செய்வார். சாப்பிடுகிற நேரத்தில் யார்வந்தாலும், அவுங்களைச் சாப்பிடச்சொல்லுவார்.

போன மாசம் டாக்டரா இருக்கிற அவரோட சின்ன மகன் லண்டன்லேர்ந்து வந்து, குடும்பத்தோட தங்கிட்டுப் போனான். அந்த பத்து நாளும் பேரப்பிள்ளைகளோட சந்தோஷமாய் பொழுது போச்சு உலகநாதம் பிள்ளைக்கு. பிள்ளை பெண்டுகள் எல்லாம் வெளிநாடு போனாலும், அவரோட மனைவி சீதை ஆச்சி இருந்தவரைக்கும் அவர் நல்லாத்தான் இருந்தார். அந்தம்மா போயி இதோ ஒன்னரை வருஷந்தான் ஆகப் போகுது. அதுக்குள்ளார மனுஷன் என்னமா ஒடுங்கிப் போய் விட்டார்.

இன்னிக்கு காத்தால வரைக்கும் ரொம்ப சீரியஸ்ஸாத்தான் இருந்திட்டிருக்கார். அவரோட பிள்ளைகளுக்கெல்லாம், புதுவீட்டு செல்லமுத்துப் பேரன் ராம்குமாரு மூலமா கம்யூட்டர்ல சேதி அனுப்பியிருக்காங்களாம். அதுவும், அமரிக்காவுல இருக்கும் அவரோட மூத்த மகனுக்குத்தான் முதல்ல. அவன் மூலமா மத்தவங்களுக்கு. அந்த விலாசம் கூட போன கோடைல அவுங்க அம்மாவுக்கு திவசம்கொடுக்க வந்தப்ப, பெரியமகன்கிட்ட உலகநாதம் பிள்ளை ரொம்ப அழுதிருக்கார்; தன்னோட தங்கி இருக்கும்படி. சுப்பிரமணி, அதான் அவரோட மூத்த மகன் ஒரு மாசமாவது அவரோட தங்கிட்டு போகலாம்னு முடிவு செஞ்சிருக்கான். அதுக்கு அவனோட பெண்டாட்டி புள்ளை குட்டிங்க ஒத்துக்கல. அதுக்கு அடுத்த வாரம் நடக்க இருந்த திருவிழாவுக்காவது இருந்திட்டு போகலாம்னு சொல்லியிருக்கார். எல்லாமே பிடிவாதமா கிளம்பி சுப்பிரமணிய இழுத்துகிட்டு பொயிடுச்சு. அப்பதான் என்ன நினைச்சானோ தெரியல சுப்பிரமணி, புதுவீட்டு செல்லமுத்து மகன் **ராம்குமார்**, அவனோட படிச்சவன், அவன்கிட்ட இந்த கம்ப்யூட்டர் விலாசம்லாம் கொடுத்து இருக்கான்.

எனக்கும் உலகநாதம் பிள்ளைக்கும் ரொம்ப நாளா பழக்கம். ஒன்னா படிச்சது; ஓடி விளையாடினது; நான் ஹைஸ்கூல் போகல. இருந்தா என்ன பார்த்தா பேசாம போக மாட்டார். "என்ன சாமினாதா"ன்னு ஒரு வார்த்தை கேட்டாம போக மாட்டார்.

நினைவுகளில் கவிந்திருந்த என்னை யாரோ கூப்பிட்டது தெரிய வந்தது. புது வீட்டு செல்லமுத்துதான் நின்றிருந்தார். "உலகநாதம் பிள்ளை போய்விட்டார்!, எம்பேரன் அனுப்பிச்ச தகவல் கிடைச்சு, பிள்ளைங்கள்ளாம் பிளேன்ல பட்டணம் வந்து, பிளஷர்ல வராங்களாம். நாளை காத்தால வந்துடுவாங்களாம்!".

என்ன இருந்து என்ன? ஊர் முழுக்க சொத்து சுகம் இருந்தும்; புள்ளை குட்டிகள் நிறைய இருந்தும், அவருமட்டும் அந்த வீட்டுல தனியா கிடக்கிறார். இருக்குற சொத்தை வெச்சுகிட்டு, அந்த புள்ளைங்க இங்கேயோ பட்டணத்துலேயோ ஆண்டுகிட்டு இருக்கலாம். எங்கே கேட்டதுங்க! ஆச்சு பத்து நாள் போனா எல்லாத்தையும் முடிச்சுகிட்டு ஊரை விட்டே போயிடுவாங்க! வாழாது வாழ்ந்த அந்த மனுஷருக்கு வசதிகள் இருந்தும், வேலையாட்கள் எல்லாம் இருந்தும், அவருடைய கண்ணீர்த்துளிகள் வெந்நீராய்த்தான் இருந்தது.

**2004** -- கவிஞர். **கவிவளவன்**